# சர்வதேச தரத்தில் சென்னை மாநகர் அழகுபடுத்தும் நடவடிக்கை தீவிரம்

சென்னை, ஆக. 13–

சென்னை மாநகரை சர்வதேச தரத்திற்கு அழகுபடுத்தப்படும் நடவடிக்கைகள் துவங்கியுள்ளதாக சென்னை மாநகராட்சி தெரிவித்துள்ளது.

சென்னை மாநகரை அழகுபடுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து, ரிப்பன் மாளிகையில் நேற்று ஆலோசனை கூட்டம் நடந்தது.

மெட்ரோ ரயில் மேலாண்மை இயக்குனர் பிரதீப் யாதவ், சென்னை மாநகராட்சி கமிஷனர் ககன் தீப் சிங் பேடி தலைமையில் நடந்த கூட்டத்தில், பல்வேறு ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இது குறித்து, சென்னை மாநகராட்சி வெளியிட்டு உள்ள செய்தி குறிப்பு:

விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகள் உட்பட சென்னை மாநகரின் பல்வேறு பகுதிகளில், உட்கட்டமைப்புகளை நவீன தொழில்நுட்பத்துடன், சர்வதேச தரத்திற்கு உயர்த்தும் வகையில், பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன.



ரிப்பன் மாளிகை வளாகத்தில் அமைக்கப்படும் பூங்கா பணிகளை, மாநகராட்சி கமிஷனர் ககன்தீப்சிங் பேடி மற்றும் அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

அதன்படி, சென்னை விமான நிலையம் முதல் கத்திப்பாரா சந்திப்பு வரை, கோயம்பேடு மேம்பாலம், அண்ணா மேம்பாலம், மெரினா கடற்கரை, மெட்ரோ ரயில் நிலைய தூண்கள், திருமங்கலம் மேம்பாலம் உட்பட, மாநகரின் பல்வேறு பகுதிகளில், சர்வதேச நகரங்களுக்கு இணையாக அழகுபடுத்தப்படும்.

இவ்விடங்களில், மரம், செடிகளை நட்டு பசுமையாக பராமரித்தல், வர்ண ஒளிரும் விளக்குகளால் அழகுபடுத்துதல், முக்கிய சந்திப்புகளில், செயற்கை நீரூற்றுகளை உருவாக்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு, அதில் கூறப்பட்டுள்ளது.